# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.8/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரிமளா | மதம் | : இந்து |
| க/பெ | : சுந்தரமூர்த்தி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பாகசாலை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.06.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 29.04.2004ம் தேதியிட்டு என் பாட்டி கன்னியம்மாள் எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 07.03.1993ம் தேதியிட்டு சுப்பிரமணிய நாயுடு வகையறா தாந்தோனி பிள்ளைக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.994ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தாந்தோனி பிள்ளையின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ்**

**வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பத்மா இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கன்னியம்மாள் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் 2 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **(வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ 7 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 03.01.1994 முதல் 25.01.2021 வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)